திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் விளக்கத்தைச் சொல்கிற நேரத்தில் சொன்னார்கள், இரவு 8 மணிக்குப் பிறகு அங்கே அமைதி திரும்பியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அறிந்திருக்கிற வகையில், இரவு பத்து மணி அளவிலே அங்கே மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி கோவிலினுடைய வேலைகள் நடைபெறுகின்ற அந்தச் சுற்றுச் சுவரானது கீற்றுக் கொட்டகையானது எரிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதற்குப் பிறகும் அதேபோன்று காவல் துறையானது தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பிறகும் கூட அங்கே வன்முறைகள் நடந்திருக்கின்றன என்று சொன்னால், இதைப் பற்றி ஒரு விரிவான விசாரணையை மாண்புமிகு முதலமைச்சர் ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்தக் கோயிலினுடைய கீற்றுக் கொட்டகை எரிக்கப் பட்டதை எரிந்தது என்கின்ற அடக்க உணர்வோடு நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதனால்தான் மொத்தமாகவே சொன்னேன். பலரும் சொன்ன கருத்துக்களை நான் அறவே புறக்கணித்து விடவில்லை. அவைகளிலே இருக்கின்ற உண்மைகளையெல்லாம் ஆராய்வதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று குறிப்பிட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது முதலமைச்சர் விளக்கத்திற்குப் பின்னால் எந்தவகையான செய்தியையும் சொல்வதற்கு யாரும் எந்த அனுமதியையும் எடுத்துக் கொள்ளக்கூடாது. இதுவே கடைசி வேண்டுகோளாக அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்பு

(அ) ஆரூர் மற்றும் கடையம் பகுதிகளில் பயிர்கள் காட்டுப் பன்றிகளால் அழிக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எம். அண்ணாமலை, கே. ரவி அருணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு இந்து சமய-அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

1990 ஏப்ரல் 16]

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டம், மற்றும் நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம் கடையம் பகுதிகளில் கிராம விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்களைக் காட்டுப் பன்றிகள் அழித்து வருவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய-அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

பொதுவாக காப்புக்காடுகளில் இருக்கும் காட்டுப் பன்றிகள் பயிர்க் காலங்களில் வெளியில் வருவது நடைமுறையில் இருந்து வருகிறது. அதை விரட்டினால் ஓடி விடுகிறது. காட்டுப் பன்றிகள் தொன்றுதொட்டு இப்பகுதிகளில் விவசாய நிலங்களுக்கு வருவதும், செல்வதும் நடைமுறையில் இருந்து வருகிறது உண்மைதான் என்றாலும், இதனால் சேதம் ஏற்படுவதை வரையறுத்துக்கூற இயலாது.

மேலும் காட்டுப் பன்றிகள் வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் அட்டவணை 3-லிருந்து 5-க்கு மாற்றி அரசு ஆணை எண் 1594 வனம் மற்றும் மீன்துறை நாள் 6-12-1982-ல் ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் பயிர்களை அழிக்கும் மிருகங்களை வேட்டையாட, சக விவசாயிகளுக்கு வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் இடமளிக்கிறது. இதில் ஒரு கட்டுப்பாடும் கிடையாது. எனவே காட்டுப் பன்றிகள் மூலம் பயிர்களுக்கு சேதம் ஏற்படுவது பற்றி மேலும் தீவிர நடவடிக்கைகள் எடுக்கத் தேவையில்லை.

திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளின் நிலங்களை அழிக்கும் காட்டுப் பன்றிகளை வேட்டையாட அனுமதி அளித்திருப்பதாக நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்து உள்ளார்கள். ஆனால், சரணாலயப் பகுதிகளுக்கு அருகில் உள்ள நிலங்களுக்குத் துப்பாக்கிகளை எடுத்துச் செல்ல விவசாயிகள் அனுமதிக்கப்படுவது இல்லை. மேலும், புதிதாக துப்பாக்கிகள் உரிமம் வழங்குவதற்குக் கூட விவசாயிகளுக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது. நிலைமை இப்படியிருக்க, எவ்வாறு விவசாயிகள் காட்டுப் பன்றிகளை வேட்டையாட முடியும் என்பதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1990 ஏப்ரல் 16

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவரவர்களே, இந்தக் காட்டுப் பன்றிகளை வேட்டையாட வேண்டும், சுட்டுக் கொல்லவேண்டுமென்ற அந்த நோக்கத்தோடு இந்த அறிக்கை இங்கே வைக்கப்படவில்லை. பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளிலேயிருந்து வருகின்ற அந்தப் பன்றிகளை விரட்டி விட்டாலே போய்விடுகின்றன என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அவைகளையும் மீறி தனியாருடைய சொந்த நிலத்தில் வந்தால் துப்பாக்கியை வைத்துத்தான் அந்தக் காட்டுப் பன்றிகளைச் சுட்டுக் கொல்ல வேண்டுமென்ற அவசியமில்லை. வேறு வகையும் இருக்கிறது. ஆகவே, ஒரு புலியைச் சுட்டுக் கொன்றால், குற்றம்; யானையைச் சுட்டுக்கொன்றால் குற்றம். ஆனால் இந்தக் காட்டுப் பன்றிகளை ஓரளவு விவசாயிகளே சமாளித்துக் கொள்ளலாம் என்ற வகையிலேதான் இந்த விளக்கம் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

11—15 மணி

*திரு. எம். அண்ணாமலை: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அவை முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் ''பொதுவாக காட்டுப் பன்றிகள் காப்புக் காட்டிலிருந்து தான் வருகின்றன; அவற்றை விரட்டினால் ஓடிவிடுகின்றன. விவசாயிகளுக்கு அவற்றால் சேதம் இல்லை. மற்றும் வன உயிரின பாதுகாப்பு விதிகளை 1982-ல் திருத்தி பயிர்களை அழிக்கும் மிருகங்களை வேட்டையாட அனுமதிஅளிக்கப்பட்டிருக்கிறது'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஏதோ தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தைச் சேர்ந்த பிரச்சினையாக மட்டும் இல்லை. தமிழ்நாடு முழுவதிலும் உள்ள காடு மலைப் பகுதிகளில் இருக்கிற விவசாயிகளின் பெரிய பிரச்சினை. இந்தப் பன்றிகள் நூற்றுக்கணக்கில் கும்பல் கும்பலாக வந்து விளைபொருள்களை நாசம் செய்கின்றன. நாளைய தினம் அறுவடை செய்யக்கூடிய நிலையில் இருந்தாலும், அங்கே இரவு முழுவதும் கண்காணித்தாலும், சிறிது அயர்ந்து தூங்கிவிட்டாலும் போதும், அவை அழிக்கப்படுகின்றன. மேலும் சுடாப் பன்றிகள், யானைத் தந்தம் போல கோரப் பற்களைக் கொண்டு இருக்கின்றன...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்கள்?

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, இதனுடைய ஆபத்தைச் சொல்கிறேன். அறிக்கையில் விரட்டினால் ஓடிவிடும் என்று சொல்லப்பட்டுள்ளது. விரட்டும்போது ஆட்கள் கொல்லப்படக்கூடிய நிலைமை இருக்கிறது அதனால் சொல்கிறேன். ஆகவே, இதனைப் பரிசீலனை செய்து காட்டுப் பன்றியால் அழிக்கப்படுகிற பயிர்களுக்காக விவசாயிகளுக்கு நஷ்டஈடு தரவேண்டும். அதற்குப் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். முதல் மாதம் 10 ரூபாய் விவசாயிகளிடமிருந்து பிரிமியம் பெற்று, பிறகு அனைத்து மாதாந்திர பிரிமியத்தையும் வனத் துறை வருவாயிலிருந்து பெற்று, விவசாயிகளைப் பாதுகாக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, நம்முடைய நாடு முழுவதும், தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியத் திருநாடு முழுவதும் வன விலங்குகளை பாதுகாக்க வேண்டும் என்று ஒரு கொள்கையோடு விதிகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. சில சமயங்களில் யானை மிதித்து மரணம் ஏற்படுகிறது. நஷ்டஈடு தருகிறோம். அதேபோல யானை பயிர்களை நாசம் செய்கின்றது. இதற்கு இங்கே தமிழ்நாட்டில் நஷ்டஈடு தர வேண்டுமா வேண்டாமா என்று ஒரு பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் ஒருசேர பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) உத்தமபாளையம், தேனி, சின்னமனூர் ஒன்றியங்கள் நிதிப்பற்றாக் குறையால் குடிநீர்க் கிணறுகளிலுள்ள பம்புசெட்டுகளுக்கு மின் கட்டணம் செலுத்தாமலுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் நா. இராமகிருஷ்ணன், ஜி. பொன்னுபிள்ளை, எல். மூக்கையா ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, 'உத்தமபாளையம், தேனி மற்றும் சின்னமனூர் ஊராட்சி ஒன்றியங்களில் போதுமான நிதி வசதி இல்லாததால் குடிநீர்க் கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் பம்ப் செட்டிற்கு மின் கட்டணம் செலுத்தாமல் உள்ளது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

5–3–1990 ஆம் நாளிட்டு பொதுப்பணித்துறை அரசு செயலாளர் அவர்கள் அனுப்பிய நே.மு. கடிதத்தில் மின்வாரியத்திற்கு அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், நகராட்சிகள் ஆகியவை செலுத்த வேண்டிய மின் கட்டணத் தொகை நிலுவையில் உள்ளதை சுட்டிக் காட்டியுள்ளார். தமிழ்நாடு மின்சார வாரியம் மிகுந்த நிதி நெருக்கடியில் இருப்பதால் மின் கட்டண பாக்கித் தொகையை உடனடியாக கட்ட தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளார். ஆனால் அம்மக்களின்அன்றாடத் தேவையை மனதில் கொண்டு 30–6–1990-க்குள் மின் கட்டணத் தொகை கட்ட காலக் கெடுவும் அளித்துள்ளார். இது குறித்து ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு 30–6–1990-க்குள் மின் கட்டண பாக்கித் தொகையை கட்ட துரித நடவடிக்கை மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.